**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்–2 திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்</u>**

**முன்னிலை : திரு.க.பிரபு. எம்.ஏ., எம்.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**திருப்பத்தூர்**

2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

**சி.ஆர்.எம்.பி. எண்.7173/2022.**

**F.NO.8296/2022.**
**CNR.NO.TNVL1C0083002022.**

S. சக்தி, க/பெ. சுப்பிரமணி, ஜம்மனபுதூர் அஞ்சல், திருப்பத்தூர்.

...மனுதாரர்.

–/எதிராக/–

1. மங்கை(எ)மங்கையம்மாள், க/பெ.கிருஷ்ணமூர்த்தி,
2. இந்துமதி, த/பெ. கிருஷ்ணமூர்த்தி,
3. சிவானந்தம், த/பெ. கிருஷ்ணமூர்த்தி,
4. சுகதேவன், த/பெ. நாராயண கவுண்டர்,

1வது முதல் 3வது வரையிலான எதிர்மனுதாரர்கள் ஏ.கே.மோட்டூர், ஜமுனபுதூர்.
4வது எதிர்மனுதாரர் பேராம்பட்டு கிராமம், திருப்பத்தூர்.

...எதிர்மனுதாரர்கள்.

இந்த மனு 10.08.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 21.11.2022 இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. A.வெங்கடேசன், B.A.,B.L., மற்றும் திரு.M.சுரேஷ், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்தும் சான்றாவணங்களையும் சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்திரவு</u>**

1. மனுதாரர் இம்மனுவினை கு.வி.மு.ச பிரிவு 156(3) ன் கீழ் எதிர்மனுதாரர்கள் மீது வழக்கு பதிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் ஏ.கே.மோட்டூர் கிராமத்தில் வசித்து வருவதாகவும், மனுதாரருக்கு ஏ.கே. மோட்டூர் கிராமம் சர்வே எண். 222/1 ல் 1.36 செண்ட் நிலமுள்ளதாகவும், மேலும் அவருடைய கணவர் பெயரில் சர்வே எண். 222/2 ல் 2.10 செண்ட் நிலமுள்ளதாகவும், மேற்படி மனுதாரருக்கு சொந்தமான நிலங்களில் வேப்ப மரங்களும், மற்ற மரங்களும் இருந்ததாகவும், அதில் கடந்த 04.07.2021 அன்று மனுதாரரும் அவருடைய குடும்பத்தினரும் வெளியூர்

சென்றிருந்த சமயம் எதிர்மனுதாரர்கள் ஒன்று சேர்ந்துக்கொண்டு காலை 11.30 மணியளவில் 11 தேக்கு மரங்களையும், 6 வேப்ப மரங்களையும் வெட்டியுள்ளதாகவும், அதுகுறித்து ஆட்டோ ஓட்டுநர் பழனி என்பவர் மனுதாரருக்கு தெரியப்படுத்தியதாகவும், அதை கேட்டு மனுதாரர் சம்பவயிடம் வந்து பார்த்து, அங்கிருந்தவர்களை விசாரித்தபோது, எதிர்மனுதாரர்கள் அங்கிருந்த மரங்களை வெட்டி டிராக்டர் மூலம் எடுத்து சென்றதாக கூறியதாகவும், மேற்படி மரங்களுக்கு சுமார் 30 வயதாகி இருக்குமென்றும், அதன் மதிப்பு ரூ.2,00,000/– என்றும், மேற்படி சம்பவம் குறித்து மனுதாரர் உடனடியாக திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தில் 04.07.2021 அன்று மாலை 04.30 மணிக்கு புகார் அளித்ததாகவும், அவர்கள் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எனவே மனுதாரரின் கணவர் சுப்பிரமணி கடந்த 05.07.2021 அன்று திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் அளித்ததாகவும, அதற்கும் மேற்படி ஆட்சியர் எந்தொரு நடவடிக்கையும் எடுக்காததால், மனமுடைந்த மனுதாரரின் கணவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீக்குளிக்க முயன்றதாகவும், அதனால் மாவட்ட ஆட்சியர் எதிரிகளின் மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியதாகவும், அதன் பின்னர் திருப்பத்தூர் கிராமிய காவல் ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு எதிரிகள் வெட்டிய மரங்களை மனுதாரரிடம் ஒப்படைக்கும் படி வலியுறுத்தியதாகவும், அதற்கு எதிரி சிவானந்தம் ஒப்புக்கொண்டதாகவும், பின்னர் எதிரி சுகதேவன் 05.07.2022 அன்று மாலை 05.00 மணிக்கு மனுதாரர் வீட்டிற்கு வந்து மனுதாரரிடம் 2.10 ஏக்கர் நிலத்தை சிவானந்தம் பெயரில் எழுதி கொடுக்கும்படியும் அப்படி கொடுக்கபடாத சூழ்நிலையில் மனுதாரரை கொலை செய்து விடுவதாக மிரட்டியதாகவும், மேலும் மனுதாரருக்கு சொந்தமான நிலத்தில் எதிரிகள் அத்துமீறி நுழைந்து மா, புளி ஆகிய மகசூல்களை அறுத்தும், மனுதாரரையும் அவருடைய கணவரையும் அடித்து காயம் படுத்தியதாகவும், அதுகுறித்து புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மேலும், எதிரிகள் காவல் ஆய்வாளர் மற்றும் கிராமிய நிர்வாக அலுவலரிடம் ஒப்புக்கொண்டுள்ளவாறு மனுதாரருக்கு சொந்தமான மரங்களை திருப்பி தரவில்லை என்றும், இது சம்மந்தமாக மனுதாரர் காவல் நிலையம் அணுகி கேட்டதற்கு அவர்கள் எவ்விதமான பதிலும் அளிக்காததால் கடந்த 03.08.2021 அன்று மனுதாரர் திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்ததாகவும், அதன் பின்பும் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்காததால் மனுதாரரின் கணவர் மேலும் 17.08.2022 அன்று முதலமைச்சர் தனி பிரிவு, மாவட்ட ஆட்சி தலைவர், காவல் துறை இயக்குநர், திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், திருப்பத்தூர் கிராமிய காவல் ஆய்வாளர் அவர்களுக்கு மனு அளித்தார் என்றும், அதன் பிறகும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எனவே, மீண்டும் 18.10.2021 அன்று மனுதாரரின் கணவர் திருப்பத்தூர் மாவட்ட காவல் துணை

கண்காணிப்பாளருக்கு புகார் அளித்தார் என்றும், அப்போது திருப்பத்தூர் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் 10.11.2021 அன்று மனுதாரரின் கணவரையும் சம்பவத்தை பார்த்த சாட்சிகளையும் மற்றும் எதிர்மனுதாரரையும் விசாரணை செய்ததாகவும், மேற்படி விசாரணையின் முடிவில் மேற்படி திருப்பத்தூர் மாவட்ட காவல் துணை கண்காணிப்பளார் அவர்கள் எந்தொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எனவே மனுதாரர் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் Crl.O.P.No.7539/2022 என்ற மனுவை தாக்கல் செய்து அதில் மாண்பமை உயர் நீதிமன்றம் 01.04.2022 அன்று குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவுகள் 154(3) மற்றும் 156(3) ஆகியவற்றின் கீழ் மனு தாக்கல் செய்து பரிகாரம் தேடிக் கொள்ள மனுதாரருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும், எனவே மேற்படி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு படி மனுதாரர் இந்நீதிமன்றத்தை அணுகி தன்னுடைய மனுவை கோரியுள்ளார்.

3. மேற்படி தன்னுடைய மனுவில் கோரியுள்ள சங்கதிளுக்கு ஆதரவாக,

i. 01.02.2008 ம் தேதியிட்ட மனுதாரர் பெயரிலுள்ள செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண்.744/2008 ன் பதிவு நகல்.

ii. 17.06.2022 ம் தேதியிட்ட கணிணி பதிவிற்க சிட்டா நகல்.

iii) 04.07.2021 ம் தேதியிட்ட காவல் ஆய்வாளருக்கு அளித்த புகார் மனு நகல்.

iv) 03.08.2021 ம் தேதியிட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட புகார் மனு ரசீது நகல்.

v) 17.08.2021 ம் தேதியிட்ட முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு அளித்த புகார் மனு நகல்.

vi) 17.08.2021 ம் தேதியிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அளித்த புகார் மனு நகல்.

vii) 17.08.2021 ம் தேதியிட்ட காவல்துறை இயக்குநருக்கு அளித்த புகார் மனு நகல்.

viii) 17.08.2021 ம் தேதியிட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அளித்த புகார் மனு நகல்.

ix) 17.08.2021 ம் தேதியிட்ட காவல் ஆய்வாளருக்கு அளித்த புகார் மனு நகல்.

x) 18.10.2021 ம் தேதியிட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அளித்த புகார் மனு நகல்.

xi) 18.10.2021 ம் தேதியிட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட புகார் மனு ரசீது அசல்.

xii) காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அளித்த விசாரணை அழைப்பு கடிதம் அசல்.

xiii) 01.04.2022 ம் தேதியிட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Crl.O.P. No. 7539/2022 ல் பிறப்பித்த உத்திரவு இணையதள பதிவிறக்க அசல்.

xiv) மரங்கள் வெட்டப்பட்டுள்ள புகைப்படங்கள், ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்.

4. மேற்படி மனுதாரரின் மனுவையும் அவர் தாக்கல் செய்துள்ள மேற்படி 1 முதல் 14 வரையிலான ஆவணங்களையும் பரிசீலனை செய்கையில் மனுதாரர் தனக்கு ஏற்பட்ட சம்பவம் குறித்து திருப்பத்தூர் கிராமிய காவல் ஆய்வாளரிடம் 04.07.2021 அன்று புகார் கொடுத்தும், பின்னர் 17.08.2021 அன்று முதல்வர் தனிப்பிரிவு, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு புகார் அனுப்பியும் அந்த புகார் மனுவில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது.

5. பாதிக்கப்பட்ட தரப்பினர் புகார் அளிக்கும் பட்சத்தில் அதன்மீது விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுப்பது காவல்துறையின் அத்தியாவசிய கடமை. அத்தனைய விசாரணையில் தான் சம்பவம் நடந்தது உண்மையா, இல்லையா என தெரியவரும். மேற்படி சங்கதிகளின் அடிப்படையிலும், ஆவணங்களை பரிசீலனை செய்கையிலும் மனுதாரரின் புகார்மீது கால்துறையினர் எந்தவித விசாரணையும் மேற்கொள்ளவிலலை என்பது தெரியவருகிறது. எனவே, நீதிமன்றம் பிரிவு 156(3) ன் கீழ் இம்மனுவினை கருத்தில் கொண்டு உரிய உத்தரவு பிறப்பிப்பது நீதியின் பால் உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. எனவே திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தார் மேற்படி மனுதாரரின் 04.07.2021 ம் தேதியிட்ட புகாரின் மீது உரிய விசாரணை செய்து அதில் முகாந்திரம் இருக்கும் பட்சத்தில் அதில் சம்பந்தபட்ட நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும், மேற்படி மனுவின் மீது எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது பற்றி இந்நீதிமன்றத்திற்கு உரிய அறிக்கையின் மூலம் தெரியப்படுத்தவும் இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு முழுவதும் என்னால் சொல்ல சொல்ல சருக்கெழுத்து தட்டச்சரால் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் காணப்பட்டு 2022–ஆம் வருடம் நவம்பர் மாதம் 25 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K PRABHU
Digitally signed by K PRABHU
Date: 2022.11.25 17:27:38 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திருப்பத்தூர்.

**<u>இணைப்புகள்.</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** – இல்லை.

<u>மனுதாரர் தரப்பு ஆவணங்களின் பட்டியல்</u>

| | | |
|---|---|---|
| 1. | ம.த.ஆ.1 | 01.02.2018 ம் தேதியிட்ட மனுதாரர் பெயரிலுள்ள செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண்.744/2008 ன் பதிவு நகல். |
| 2. | ம.த.ஆ.2 | 17.06.2022 ம் தேதியிட்ட கணிணி பதிவிற்க சிட்டா நகல். |
| 3. | ம.த.ஆ.3 | 04.07.2021 ம் தேதியிட்ட காவல் ஆய்வாளருக்கு அளித்த புகார் மனு நகல். |
| 4. | ம.த.ஆ.4 | 03.08.2021 ம் தேதியிட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட புகார் மனு ரசீது நகல். |
| 5. | ம.த.ஆ.5 | 17.08.2021 ம் தேதியிட்ட முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு அளித்த புகார் மனு நகல். |
| 6. | மத.ஆ.6 | 17.08.2021 ம் தேதியிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அளித்த புகார் மனு நகல். |
| 7. | ம.த.ஆ.7 | 17.08.2021 ம் தேதியிட்ட காவல்துறை இயக்குநருக்கு அளித்த புகார் மனு நகல். |
| 8. | ம.த.ஆ.8 | 17.08.2021 ம் தேதியிட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அளித்த புகார் மனு நகல். |
| 9. | ம.த.ஆ.9 | 17.08.2021 ம் தேதியிட்ட காவல் ஆய்வாளருக்கு அளித்த புகார் மனு நகல். |
| 10. | ம.த.ஆ.10 | 18.10.2021 ம் தேதியிட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அளித்த புகார் மனு நகல். |
| 11. | ம.த.ஆ.11 | 18.10.2021 ம் தேதியிட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட புகார் மனு ரசீது அசல். |
| 12. | ம.த.ஆ.12 | காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அளித்த விசாரணை அழைப்பு கடிதம் அசல். |
| 13. | ம.த.ஆ.13 | 01.04.2022 ம் தேதியிட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Crl.O.P. No. 7539/2022 ல் பிறப்பித்த உத்திரவு இணையதள பதிவிறக்க அசல். |
| 14. | ம.த.ஆ.14 | மரங்கள் வெட்டப்பட்டுள்ள புகைப்படங்கள். |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளின் பட்டியல்</u>– இல்லை.
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களின் பட்டியல்</u> – இல்லை.

K PRABHU Digitally signed by K PRABHU Date: 2022.11.25 17:27:44 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
திருப்பத்தூர்.